[16th March 1961

THE HON. SRI C. SUBRAMANIAM: Presumably the hon. Member refers to the reported speech of the Director of Public Instruction at Tiruchirappalli while inaugurating the English Language Teaching Campaign on 6th December 1960.

The Director of Public Instruction has not been correctly reported in the Press.

SRI A. A. RASHEED: May I know the reason for not contradicting the report in the papers?

THE HON. SRI C. SUBRAMANIAM: It is almost impossible to go on contradicting every speech, that is reported in the papers.

Bus transport in rural areas

* 870 *Q.*—SRI M. P. SARATHI: கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் பஸ் போக்குவரத்தை அதிகரிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(இ) அதற்கு விசேஷ சலுகை காட்டப்படுகிறதா?

THE HON. SRI V. RAMAIAH: (அ) & (இ) A Planning and Development Wing has been formed in the Transport Department to conduct traffic surveys to assess the need for additional transport facilities in each district of this State and make recommendations to Government for opening of new routes, introduction of additional buses in existing routes and extension of routes.

There is also a proposal under examination to provide special type 14 seater buses to negotiate narrow roads in village parts with a view to connecting interior villages.

SRI S. M. ANNAMALAI: ஸார், சில கிராமப்புறங்களிலே அதிகமான பஸ்களுக்குத் தேவை இருந்து, அதைப்பற்றி, சில அதிகாரிகள் சிபார்சு செய்தபோதிலும்கூட, பிளீட் ஓனர்கள் உடனடியாக அப்பீல் செய்து அதைத் தடுத்து விடுகின்றனர். ஆகவே இந்த கிராமப்புறங்களுக்கு தனிச்சலுகை கொடுத்து, அதற்கான முயற்சிகளை இந்த சர்க்கார் எடுக்குமா?

THE HON. SRI V. RAMAIAH: கிராமப்புறங்களுக்கு அதிகமான பஸ்கள் விடவேண்டுமென்ற எண்ணத்தை நான் ஆதரிக்கின்றேன். அதற்காகவே விசேஷமாக இப்போது டெவலப்மெண்ட் விங் என்ற ஒரு அமைப்பை அமைத்து, அவர்கள் பரிசீலனை செய்து எங்கெங்கே பஸ்கள் விட முடிவு செய்கின்றார்களோ, அந்த இடங்களில் எல்லாம் போக்குவரத்தை ஏற்படுத்த அரசாங்கமே முடிவு செய்திருக்கிறது. ஆகையால், இதில் தனிப்பட்டவர்கள் தலையிட்டு எந்தவிதமான கஷ்டத்தையும் கொடுப்பதற்கில்லை.

SRI M. KALYANASUNDARAM: ஸார், டிரான்ஸ்போர்ட் கமிஷனரின்கீழ் பணிபுரியக்கூடிய விசேஷக் குழுவைத்தான் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள் என்று நினைக்கிறேன். அப்படியானால், அந்தக் குழு என்ன சிபார்சுகள் செய்திருக்கிறது? அது சபையின் முன் வைக்கப்படுமா?

16th March 1961]

THE HON. SRI V. RAMAIAH : அதற்குத் தனி கேள்வி போடவேண்டும்.

SRI M. A. B. ARUMUGHASAMY : மதுரை ஜில்லாவில் பஸ்கள் போகாத கிராமங்களிலே பஸ்கள் போவதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அப்படி பஸ்கள் இதுவரை அப்படிப்பட்ட கிராமங்களுக்கு அனுமதிக்கப் படாததின் காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : பஸ்ஸை போகமுடியாத கிராமங்களுக்கு எப்படி பஸ்கள் விட முடியும்? அப்படிப்பட்ட சூழ்நிலை அங்கு இருக்கின்ற காரணத்தால், பஸ்கள் விடுவதற்கில்லை.

SRI V. SUBBIAH : புதிதாக பஸ்களை நீடிக்கவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டிருப்பவர்களுக்கு வசதியாக, இப்போது இருக்கக்கூடிய 15 மைல் என்று இருப்பதை 25 மைலாக நீடிப்பதற்கு ஏதாவது அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

(பதில் இல்லை.)

SRI A. MARIAPPAN : ஆரம்பத்தில் 15 மைல் என்று பஸ் சொந்தக்காரர்கள் அனுமதி வாங்கிக்கொண்டு, மறுபடியும் அதை அதிக மைல்களாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதால், கிராம மக்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுகிறது என்பதைச் சர்க்கார் உணருகிறதா ?

MR. SPEAKER : இதிலே எப்படி இந்தக் கேள்வியைக் கேட்க முடியும். இந்தக் கேள்வி கிராமப்புறங்களிலே பஸ் போக்குவரத்தை அதிகரிக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது. தாங்கள் கேட்பதோ அக்விசிஷனைப் பற்றி. எப்படி இந்தக் கேள்வியைக் கேட்க முடியும் ?

Maternity training

* 871 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of students that are undergoing Maternity training and the places where they are trained;

(*b*) whether there is any proposal to increase the present strength; and

(*c*) if so, the new strength?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) A statement [a] is placed on the table of the House.

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

[a] Printed as Appendix II on page 699 infra.